MUTHTHARASI – ART LITERARY CULTURE TAMIL JOURNAL
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ்ஆய்விதழ்
VOLUME – I ISSUE – 2 FEB – 2024
E-ISSN : 2584-1238

# நடப்பியல் நோக்கில் அரும்பு(சிறுகதை)

**மா.முத்துச்செல்வி,உதவிப்பேராசிரியர்,தமிழ்த்துறை,**

**தி ஸ்டாண்டர்டு ஃபயர் ஒர்க்ஸ் இராஜரத்தினம் மகளிர் கல்லூரி,சிவகாசி.**

DOI 10.5281/zenodo.10587177

**Abstract :**

**Approaches to literature differ from period to period. Thus, in the early period people read and enjoyed literature as it was and as they felt it. Later, a method of approaching the literature with a research perspective emerged among the researchers. Theories may be the result of them. These theories first appeared in the West. However, they were dealt with in Tamil literature only in the 19th century. Contemporary literature is a suitable field for examining these theories. In this way, this article is a study of the current view expressed in the short story "Arumbu" which is included in the collection of short stories by Manavaripoo Anthology by Mandana Ponnusamy in the contemporary literature.**

**Key Words : Short Story - Realism - Karisal Literature**

இலக்கியங்களை அணுகும் முறையானது காலத்திற்குக் காலம் வேறுபடுகிறது. அவ்வகையில், தொடக்க காலத்தில் மக்கள் இலக்கியங்களை, உள்ளவாறும் அவர்கள் உணர்ந்தவாறும் படித்து இன்புற்றனர். பின்னர், அவ்விலக்கியங்களை ஆய்வுக் கண்ணோட்டத்துடன் அணுகும் முறையானது ஆய்வாளர்களிடையே தோன்றியது. அவற்றின் விளைவாகத் தோற்றம் பெற்றதே கோட்பாடுகள் எனலாம். இக்கோட்பாடுகள் முதன்முதலில் மேலை நாட்டில் தோன்றின. ஆயினும், 19-ஆம் நூற்றாண்டு அளவிலேயே தமிழ் இலக்கியங்களில் கையாளப்பட்டன. இக்கோட்பாடுகளைப் பொருத்திப் பார்ப்பதற்கு ஏற்றக் களமாக அமைவது தற்கால இலக்கியங்களே. அவ்வகையில் தற்கால இலக்கியங்களுள் மேலாண்மை பொன்னுசாமி அவர்களது சிறுகதைத்தொகுப்பான மானாவாரிப்பூ

தொகுப்பில் இடம் பெற்றுள்ள அரும்பு என்னும் சிறுகதையில் வெளிப்படும் நடப்பியல் பார்வைக் குறித்து ஆய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

**நடப்பியல்**

நடப்பியல் என்பது உள்ளதை உள்ளவாறே எடுத்து இயம்புதல் என்று பொருள்படும். இந்நடப்பியல், யதார்த்தவியல், யதார்த்தவாதம், உண்மைவாதம், மெய்ம்மையியல் எனப் பல சொற்களால் குறிக்கப்படுகிறது. **"நடப்பியல் என்பது அன்றாட வாழ்வில் எவ்விதப் புனைவுமின்றி உள்ளது உள்ளபடி இலக்கியத்தில் கூறும்முறையாகும். இது மேனாட்டில் பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஓர் இலக்கிய இயக்கமாகவே எழுந்தது"**[1] என்பார் முனைவர் சாந்தா.

**கரிசல் நிலம்**

கரிசல் வட்டாரம் என்பது மண்ணின் தன்மையின் அடிப்படையில் அமைந்த பெயராகும். பெரும்பாலும் கரிசல் நிலப்பகுதி வானம் பார்த்த பூமியாகவே உள்ளது. எனவே மழையை நம்பி விவசாயம் மேற்கொள்ளுதல் என்பது இங்கு சாத்தியமில்லை. ஆக இங்குள்ள மக்கள் தொழிலானது விவசாயம் குறைவாகவும், பட்டாசு, தீப்பெட்டித் தொழிற்சாலை வேலை மிகுதியாகவும் காணப்படுகிறது. ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட அரும்பு சிறுகதையும் தீப்பெட்டித் தொழிற்சாலையை மையமாக வைத்தே படைக்கப்பட்டுள்ளது.

**குழந்தை தொழிலாளர்கள்**

குழந்தைகள் சமூகத்தின் எதிர்காலத் தூண்களாவர். ஆனால் எதிர்காலத் தூண்கள் வறுமையால் சரிந்தே காணப்படுகின்றதைக் கரிசல் நில வாழ்வானது எடுத்துக்காட்டுகிறது. கொடிது கொடிது வறுமை கொடிது அதனினும் கொடிது இளமையில் வறுமை. வறுமை குறித்து வள்ளுவரும்,

**"இன்மையின் இன்னாதது யாதெனின் இன்மையின்**
**இன்மையே இன்னாதது"**[2]

வறுமையை விடக்கொடிது வறுமையை அன்றி வேறில்லை என்று கூறியுள்ளார். **"மக்களின் வருவாய்க்குறைவை வறுமை எனவும், அவர்தம் வாழ்க்கைக்கு வேண்டிய பொருட்களின்**

MUTHTHARASI – ART LITERARY CULTURE TAMIL JOURNAL
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ்ஆய்விதழ்
VOLUME – I ISSUE – 2 FEB – 2024
E-ISSN : 2584-1238

**பற்றாக்குறைவை வறுமை எனவும் வரையறுக்கும் இருவிதக் கருத்துக்கள் பொருளியலாளரால் கூறப்பட்டுள்ளன.”**[3] இத்தகைய வறுமையின் தாக்கத்திற்குக் கரிசல் வட்டார மக்கள் விதிவிலக்கன்று. அவற்றிலும் குழந்தைகள் வறுமையின் தீராப்பசிக்கு இரையாகின்றனர். இச்சிறுகதையிலும், வறுமையின் காரணமாகத் தீப்பெட்டித் தொழிற்சாலைக்குச் சிறுமிகள் செல்லுதல் வழக்கமாக உள்ளதைக் காட்டுகிறது. அதிலும் 14 வயதிற்குட்பட்டவர்கள் பணியில் அமர்த்துதல் குற்றமாகும் என்ற சட்டம் அமலுக்கு வந்ததும் 8 வயது சிறுமிகள் தாவணி அணிந்து பணிக்குச் செல்லுதல் இயல்பாக இருந்தமையை,

**”நம்ம செல்லி சின்னப் புள்ளதா, இருந்தாலும் சும்மாவாச்சும் தாவணியைச் சுத்தி அனுப்புங். மத்ததை நா பார்த்துக்கிடுதேன் யக்கா. மனசிலே ஞாபகம் வச்சுக்கங்க. தாவணி போட்டா திங்கட் கிழமை வரலாம் இல்லேன்னா…. நின்னுக்கிட வேண்டியது தான்”** (மேலாண்மை பொன்னுச்சாமி, மானாவாரிப்பூ சிறுகதைத் தொகுப்பு, பக்.24) சிறுகதை வரிகளின் வாயிலாக அறியமுடிகின்றது. கரிசல் வட்டார யதார்த்த வாழ்வினை, வறுமையின் காரணமாக குழந்தைத் தொழிலாளர்கள் பணியில் அமர்த்தப்படுவதின் வாயிலாக அறிய முடிகின்றது.

**குழந்தைத் தொழிலாளர்களின் நிலை**

குழந்தைத் தொழிலாளர்களை அழைத்துச்செல்லும் பேருந்தில் எவ்வளவு ஆட்கள் ஏற்ற முடியுமோ அதையும் மீறி அதிக அளவில் ஆட்களை ஏற்றிக் கொண்டு தொழிற்சாலைக்குள் பேருந்து செல்லும். அப்பேருந்தில் சிறு குழந்தைகள் முதல் பெரியோரும் இருப்பர். சில சமயம் சிறு குழந்தைகள் கூட்ட நெரிசலில் மூச்சு முட்டி மயக்கம் அடைந்துவிடுவர். அப்படியாயினும் பேருந்தில் குறைவான ஆட்களை ஏற்றாமல் அடிமாட்டை ஏற்றிச் செல்வது போன்றே ஏற்றிச் செல்லும் நிலையில் குழந்தைத் தொழிலாளர்கள் நிலை உள்ளமையை,

**”மாதாங்கோவில்பட்டியைத் தாண்டுகிற போது, பஸ்சுக்குள் மூச்சுப்புக இடமிருக்காது. புளிச்சிப்பமாகப் பிள்ளைகள் திணிக்கப்பட்டு , கிட்டிக்கப்பட்டு வியர்த்து கசங்கி, திணறி… சில சமயங்களில் மயக்கமே போட்டுத் துவண்டுவிடும்”** (மேலாண்மை பொன்னுச்சாமி, மானாவாரிப்பூ சிறுகதைத் தொகுப்பு, பக்.23) குழந்தைத் தொழிலாளர்கள் இன்னலுக்கு ஆட்பட்டாலும் முதலாளிகள்

அவர்கள் மீது சிறிதும் பொறுப்பின்றி அவர்களைத் தீப்பெட்டிக்குள் அடைக்கும் தீக்குச்சிகளைப் போன்றே வேலைக்கு அழைத்துச் செல்வதை இச்சிறுகதை வரிகள் உணர்த்துகின்றன.

**பாலியல் பிரச்னைகள்**

பெண்களுக்குத் தீராத பிரச்னையாக இருப்பது பாலியல் சார்ந்த பிரச்னைகளே. அதிலும் குறிப்பாக இத்ததைய தொழிற்சாலைகளில் பணிபுரியும் பெண்களிடமும் இத்தகைய சிக்கல் அதிகமாகவே காணப்படுகிறது. தீப்பெட்டித் தொழிற்சாலைக்கு அழைத்துச் செல்லும் பேருந்தின் கண்டக்டர் சிறு குழந்தைத் தொழிலாளர்களைப் பார்க்கும் போது எரிச்சலடைவதும், பருவ வயது பெண்களிடம் அவன் மகிழ்ச்சியுடன் பேசுவதும் இச்சிறுகதையில் பதிவு செய்யப்பட்டுள்ளமையை,

**“அந்த அதட்டல் உருட்டடெல்லாம் செல்லி மாதிரியான சிறுமிகளிடம் தான் . தாவணி போட்ட முற்றிய சிறுமிகளிடம் பூப்பெய்திய இளம் பெண்களிடமும் தொனியே மாறி விடும். அவர்களிடம் பேசும் போது எத்தனை நெளிவு.... என்னமாய்ச் சிரிப்பு... எவ்வளவு குழைவு!”** (மேலாண்மை பொன்னுச்சாமி, மானாவாரிப்பூ சிறுகதைத் தொகுப்பு, பக்.22) என்ற சிறுகதை வரிகள் உணர்த்துகின்றன. பெண்களின் மீதான சமூக நடப்பு நிகழ்வுகளை மிகவும் யதார்த்த நோக்கில் பதிவு செய்துள்ளது.

**ஏஜெண்டுகள்**

தீப்பெட்டித் தொழிற்சாலைக்குத் தேவையான தொழிலாளர்களை முதலாளி ஏஜெண்டுகள் மூலமே வரவழைத்துக் கொள்வர். தொழிலாளிகளுக்கும் முதலாளிகளுக்கும் இடையில் இடைத்தரகர்கள் மாதிரி ஏஜெண்டுகள் செயல்பட்டனர். இதனை அரும்பு சிறுகதையில் இடம்பெறும்,

**”மந்தையாடுகளைப் பற்றிக்கொண்டு வருவதைப் போல..... குழந்தைகளை நகர்த்திக் கொண்டு பஸ்சுக்குள் அடைத்தார். ஏஜெண்ட் தலைகளை எண்ணிப்பார்த்தார். ஒண்ணு குறையுதே, யாரு? ”ஆவுடைடச்சி“ அவதான் சடங்காகிட்டாளே இன்னும் பானைஞ்சு நாளுக்கு வரமாட்டாளே... சொல்லிவிட்டுக் கண்டக்டர் அசிங்கமாகக் குறுநகை செய்தான். ”** (மேலாண்மை பொன்னுச்சாமி, மானாவாரிப்பூ சிறுகதைத் தொகுப்பு, பக்.23) இவ்வரிகளின் வாயிலாக அறியலாம். சமூகம் இன்றும் பெண்ணிற்கு ஏற்படும் இயற்கை நிகழ்வுகளைப் பார்க்கும்

பார்வையில் எவ்வித மாற்றமும் அன்றிலிருந்து இன்றுவரை ஏற்படவில்லை என்பதை இச்சிறுகதை வரிகள் உணாத்துகின்றன.

**தீப்பெட்டித் தொழிற்சாலை மூடல்**

தீப்பெட்டித் தொழிற்சாலைகள் இன்றளவிலும் அதிகமாக இயங்கவில்லை. இச்சிறுகதையில் அவை பதிவு செய்யப்பட்டுள்ளன. தொழிற்சாலை மூடப்படுகின்ற காரணத்தினால் தொழிலாளர் குறைப்பு நடைபெற்றமையும் இச்சிறுகதையில் இடம்பெற்றுள்ளதை,

**"யக்கா, இப்போ… குளோரைடு கிடைக்க மாட்டேங்குது. ஏகத்தட்டுப்பாடு நிறைய தீப்பெட்டித் ஆபீஸ்கல மூடிக்கிடக்க ஒண்ணு ரெண்டு ஆபீஸ்கள்லே தான் வேலை நடக்குது. வேலைக்கு வர்ற புள்ளைங்கள குறைக்கச் சொல்லி எங்க மொதலாளி நச்சரிக்காரு"** (மேலாண்மை பொன்னுச்சாமி, மானாவாரிப்பூ சிறுகதைத் தொகுப்பு, பக்.24)

இவ்வரிகளின் வாயிலாக அறியலாம். பெரும்பான்மையான தீப்பெட்டித் தொழிற்சாலைகள் மூடிய நிலையில் கரிசல் நில மக்கள் பலர் வேலை இழப்பைத் தழுவினமையை இச்சிறுகதையின் வாயிலாக அறியமுடிகின்றது.

**சிறுமியின் மனநிலை**

தன் தந்தையின் இறப்பிற்குப் பின் தாய் நோய்வாய்பட்ட நிலையில் இருக்கும் போது இருவரின் வாழ்வாதாரத்திற்காக செல்லி தீப்பெட்டி ஆபிஸில் கட்டை அடுக்கும் வேலை செய்கிறாள். ஆனால் அங்கு பல பிரச்னைகள் இருப்பினும் தாயின் உடல்நலம் கருதி எட்டு வயது சிறுமி வேலை செய்து கொண்டிருக்கிறாள். தீடீரென தாவணி அணிந்து வந்தால் தான் வேலை என்று சொல்லும் போது அவள் அதை மறுக்கிறாள். தாய் கூறியும் கேட்காது மறுக்கிறாள். தாவணி கட்டினால் தான் வேலை என்றால் நான் கட்டவும் மாட்டேன் வேலைக்குச் செல்லவும் மாட்டேன் என்கிறாள். இறுதியில் தாயின் நிலை கண்டு மனம் இரங்கி அப்பிஞ்சு குழந்தை வேலைக்குச் செல்லும் நிலைக்குத் தள்ளப்படுவதை,

**"முத்துலட்சுமி இருட்டில் வந்து கொண்டிருந்தாள். வாசலில் திகைத்துப்போய் செல்லி,**

**"என்ன செல்லி வேலைக்கு வரலியா?"**

**"வாரேன்" உயிரில்லாமல் முனங்கினாள்**

**" தாவணி"?**

**"மடிச்சு கையிலே வைச்சிருக்கேன். பஸ்கிட்ட போய் போட்டுக்கணும்" சத்தமில்லாத தெருவில் சத்தமில்லாமல் நடந்தனர்.** (மேலாண்மை பொன்னுச்சாமி, மானாவாரிப்பூ சிறுகதைத் தொகுப்பு, பக்.28) இவ்வரிகளின் வாயிலாக அறியலாம். சட்டத்தை இயற்றுவதே மீறுவதற்காகத்தானே என்னவோ பதினான்கு வயதிற்குட்பட்ட குழந்தைகள் பணியில் அமர்த்தப்பட கூடாது என்பதே கல்வியறிவு பெற வேண்டும் என்பதற்காக, ஆனால் ஒரு தாவணியை அணிந்து அவற்றையும் எளிதாகக் கடந்து செல்கின்ற முதலாளி வர்க்கத்தினைப் படம்பிடித்துக் காட்டுகிறது இச்சிறுகதை.

**தாவணி போடும் மரபு**

தாவணி போடும் மரபு என்பது பெண்களுக்கு ஒரு சடங்கா இருந்து வருகின்றது. வேலைக்காகச் சிறுமியைத் தாவணி போடுமாறு கூறும்போது செல்லியின் தாய் வேலாயி புலம்புகிறாள். தாய்மாமன் சீர்வரிசையோடு கூடுன கூட்டத்துல போட வேண்டிய தாவணிய சட்டத்த ஏமாத்துறத்துக்காக எப்படி போட என்று புலம்புவதிலிருந்து தாவணி போடுதல் என்பது சடங்காக இருந்துள்மையை அறிய முடிகின்றது.

**தொகுப்புரை**

- அரும்பு என்ற சிறுகதையில் தீப்பெட்டித்தொழிற்சாலைக்குச் செல்லும் சிறுமியின் வாயிலாக கரிசல் வட்டார நடப்பியல் வாழ்வானது பதிவு செய்யப்பட்டுள்ளது.
- வறுமையால் விரல் சப்பும் வயதிலிருக்கும் சிறுமி வேலைக்குச் செல்லும் அவல நிலைக் குறித்து குறிப்பிடப்பட்டுள்ளது.
- பெண்களுக்கு ஏற்படும் பாலியல் பிரச்னைகளானது காலங்காலமாக சமூகத்தின் தீராப் பிரச்சனையாக வலம்வருகின்றது. இவற்றிற்குத் தீப்பெட்டி தொழிற்சாலைப் பெண்களும் விதிவிலக்கல்ல என்பதை சிறுகதை எடுத்துக்காட்டுகிறது.

- பருவமடைவதற்கு முன்பே தாவணி அணிய கட்டாயப்படுத்தும் நிலை சமூகத்தின் வறுமை நிலையினை படம்பிடித்துக்காட்டுகிறது.
- குழந்தைத் தொழிலாளர்களை ஏற்றிச் செல்லும் பேருந்தின் நிலையானது தீப்பெட்டிக்குள் சிக்கிய தீக்குச்சிகளைப் போன்றுள்ளது என்பதிலிருந்து குழந்தைத் தொழிலாளர்கள் அக்காலகட்டத்தில் பணியில் அமர்த்தப்படுதல் இயல்பாக அமைந்துள்ளது.
- கரிசல் நில மக்களின் வாழ்வியலானது வறுமையில் சிக்கி போராட்டமாகவே அமைந்துள்ளது.
- வறுமை என்பது தனிமனித பிரச்சனை சமூகத்தின் பிரச்சனை என்பதை இவ்அரும்பு என்னும் சிறுகதை உணர்த்துகிறது.

**சான்றெண் விளக்கம்**

1. முனைவர் கு. சாந்தா, கு. சின்னப்ப பாரதியின் நாவல்கள், ப. 19
2. திருக்குறள், 1041
3. த.அமிர்தலிங்கம் தமிழ்க்கவிதைகளில் வறுமை புனைவு, ப.162.